## ஆலயங்களல் ஏற்படும் நன்மைகள்

உலகில் உள்ள அனைத்து சமய ஆலயங்களும் ஒரு குறிப்பிட்ட அளவுகளில் அமைக்கப்பட்டுள்ளது என்பதுதான் உண்மை.

- மேலும் எல்லா ஆலயங்களிலும் பஞ்ச சக்திகள் பயன்படுத்தப் பட்டுள்ளது. வெளித்தோற்றத்தில் வேண்டுமானால் பல வடிவங்கள் பல அழகுவேலைகள் செய்யப்படுகின்றன. ஆனால் உள் அமைப்புகள் ஒரே மாதிரிதான் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

- அவ்வாறு முறையாக அமைக்கப்பட்டுள்ள அமைப்பில் இயற்கைச் சக்திகள் ஒருங்கிணைக்கப்படுகின்றன. அவ்வாறு அமைந்த இடத்தில் (கருவறை) சிலைகள் நிறுவப்படுகின்றன

- அந்தச்சிலைகள் அமைந்துள்ள ஆலயத்திற்குள் மக்கள் வழிபாடு செய்ய வருகின்றார்கள். அவ்வாறு வழிபடும்போது அங்கே குவிந்துள்ள இயற்கைச் சக்தியால் மனிதர்கள் மனத்தெளிவு அடைகின்றர்கள். இதனால் மனிதனுக்கு மனம் தெளிந்த நிலையில் நல்ல யோசனையும் நல்ல முடிவுகளும் தோன்றும். இவ்வாரான நிகழ்வால் வாழ்கையில் முன்னேற்றம் அடைகின்றர்கள்

## தீபம் ஏற்றுவதால் ஏற்படும் நன்மைகள்

- ஆலயத்திலும் இல்லங்களிலும் ஏற்றப்படும் தீபத்தினால் அந்த இடம் வெளிச்சம் பெறுகின்றது. தீபங்கள் எரியும்போது அதிலிருந்து வெளிப்படும் வெற்பம் மனிதர்களுக்கு குளிர்காலத்தில் நன்மை தரும். தீபம் எரியும்போது எண்ணெயில் உள்ள நன்மை தறும் பொருள்கள் காற்றில் கலந்து சுவாசம் மூலம் மனித உடலுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை தருகின்றது

- இதே போல் பெரிய அளவில். ஓம குண்டங்களை ஏற்படுத்தி அதில் அக்னி வளர்த்து பல்வேறு மருத்துவக் குணம் நிறைந்த முலிகைப்பொருள்களை அதில் போடுவதன் மூலம் நன்மை செய்யும் ஆற்றல்கள் பெருகி காற்றில் கலந்து காற்றைத் தூய்மைப்படுத்தவும் செய்கின்றது. (மற்ற மதத்தினர்கள் சாம்பிராணி போடுகின்றர்கள்)

## நாம் வழிபாடு செய்யும் உருவச்சிலைகளால் ஏற்படும் நன்மைகள்

- பல இறை உருவங்களை நம் முன்னோர்கள் உருவாக்கினார்கள்.

- அந்த இறை உருவத்தில் அமைந்துள்ள அங்கங்கள் ஆயுதங்கள் ஆபரணங்கள் எல்லாம் ஒவ்வொரு செயல்களையும் விளக்குவதாக உள்ளது

- இறைவன் கையில் இருக்கும் உடுக்கை ஒலி அலைகளையும் இசைவகைகளையும் உள்ளிட்ட பல விஷயங்களை உணர்துத்கின்றனா.

- சிதம்பரத்தில் உள்ள நடராஜர் ஆடிய நாட்டிய முறைகளைப் பயின்றால் அதன் மூலம் மனிதனுக்கு ஏற்படும் நோய்களைத் தீர்க்கலாம். யோக நிலையிலும். இவை கிடைக்கும்.

- சுதர்சன சக்கரம் என்பது காலச்சக்கரம் ஆகும். ஒரு நொடிகூட நிற்காமல் சுழலும் பூமியையும் அண்டவெளியில் உள்ள ஏனைய கோள்களின் இயக்கத்தினையும் சுட்டிக்காட்டுவதாக அமைந்துள்ளது. (கடந்த-நிகழ்-எதிர்காலத்தை-குறிக்கும் **காலதேவன்** )

- நான்முகனின் உருவம் நான்கு வேதங்களைக் குறிக்கும் அதன் கீழ்வரும் ஆய கலைகள் 64 கற்பதின் வெளிப்பாடுகள் ஆகும் இவைகள்

- இதுபோல் இறைஉருவங்களில் உள்ள ஆயுதங்கள். ஆபரணங்கள் எல்லாம் எண்ணற்ற கடந்த நிகழ் எதிர்கால நிகழ்வுகளையும் விளக்கும் வகையில் அமைந்துள்ளன

- அசரங்கள் எல்லாம் வழிபாட்டு முறைகள் மற்றும் கட்டட அமைப்புகளைப் பற்றியும் பல்வேறு வாழ்வியல் முறைகளையும் உலகில் கடந்த –நிகழ்- எதிர்கால நிகழ்வுகளின் குறிப்புக்களாகும் மந்திர சொற்கள் எல்லாம் மனித உடலில் உள்ள நல்ல சுரப்பிகளைத் துாண்டி நோய்கள் ஏற்படாமல் தடுக்கின்றது

- மனிதர்கள் உணர்ந்தவை சில மட்டும்தான் இந்த அண்டத்தில் இன்னும் அறியாமல் உள்ளவை கோடான கோடி உள்ளனா

- நம் நாட்டில் உருவாக்கப்பட்டுள்ள சாமி சிலைகள் எல்லாம் நோய்தீர்க்கும் ஆற்றல் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

1 அதில் நவபாஷண சிலை. இதில் முதன்மையாது.
2 பஞ்சலோக சிலை.
3 தங்க்ச் சிலை.
4 வெள்ளி சிலை.
5 செம்புச் சிலை.
6 பித்தளைச்சிலை.
7 தாமிரச்சிலை.
8 கற்சிலை.
9 ஈயச் சிலைகலாகும்.
ஆகியவையாகும்

- மேற்கண்ட சிலைகளின் மீது ஊற்றப்படும் நீர் உள்ளிட்ட பொருள்கள் எல்லாம் நோய் தீர்க்கும் தன்மையை அடைகின்றது

- நாம் ஆலயத்திற்குச் சென்று அங்குள்ள சிலையின் மீது அபிஷேகம் செய்கின்றோம். அப்படி அபிஷேகம் செயும்போது சிலையின் மீது படும்

உணவுப்பொருள்களில் சிலையில் உள்ள நோய்தீர்க்கும் சக்திகள் கலந்துவிடும் அப்படிப்பட்ட தீர்த்தங்களை மக்களுக்கு வழங்கினால் நோய் தீர்ந்து சுகமடைவர்கள்

- இறைவன் முன் பதாரத்தங்களையும் கனிவகைகளையும் அபிஷேகப் பொருள்களையும் இனிப்பு வகைகளையும் ஆடை ஆபரணங்களையும் பொன் பொருள்களையும் உணவு வகைகளையும் தானியங்களையும் தேங்காய் பழங்கள் மற்றும் பூசைக்குரிய பொருள்களையும் படைத்து வழிபாடு செய்கின்றோம். அப்படி வழிபாடுசெய்தபின் மேற்கண்ட பொருள்களை ஆலயத்தில் உள்ள ஏழை எளியவர்க்கு வழங்க வேண்டும் காரணம் 1 அவர்கள் பசியை போக்கும் 2 சத்தான உணவை சாப்பிட்டு உடல் நலம் பெற்று அவர் தேவைகளை அடைய அவரே உழைக்கும் நிலைக்கு உயர்த்தும். இந்தநிலையில் அவர் ஆலயத்தைவிட்டு உழைப்பை நாடிச் சென்றுவிடுவர் என்பது குறிப்பிடத்தக்கது

- வயதானவர்கள் மற்றும் உடலால் முடியாதவர்கள் இந்த தானம் பெறுவதற்கு முன்னுரிமை பெற்றவர்கள் என்பதை உணர்வது அவசியம்

- சோறு கண்ட இடம் சொர்க்கம் என்று வாழும் ஈனப்பிறவிகளை இதில் சேர்க்ககூடாது. அப்படிப்பட்டவர்களுக்கு உணவோ பொருளோ வழங்கினால் அவர்களை மேலும் சோம்பேறியாக்கிய பாவமும் அவர்கள் செய்யும் பாவச்செயலுகக் துணை செய்த பாவமும் அவருக்கு தானம் செய்தவரையும் சாரும் என்பது குறிப்பிடத்தக்கது

உலகில் உள்ள எல்லா உயிர்களுக்கும் ஆதார சக்தியாக இருப்பது

- 1) நிலம்
- 2) நீர்
- 3) நெருப்பு
- 4) காற்று
- 5) ஆகாயம்

பஞ்சபூதங்களாகும் இந்த சக்திகளின் உதவி இல்லாமல் உலகில் எந்த உயிரினமும் வாழ முடியாது

மேலும் நம் பிறப்பு இறப்பு இவற்றை முடிவுசெய்வதும். நாம் எண்ணும் எண்ணங்கள் பேசும் பேச்சுக்கள் செய்யும் செயல்கள் எல்லாம் மேற்கண்ட பஞ்ச சக்திகளிலும் பதிவாகிக் கொண்டிருக்கின்றன. என்பது மறுக்கமுடியாத உண்மை. அந்தப் பதிவின் அடிப்படையில் மனிதவாழ்க்கை. அமைகின்றது அதில் நன்மை செய்தால் நன்மையும் தீமை செய்தால் தீமையும் அவர்கள் செயலுக்கேற்ப அனுபவிக்க நேரும் என்பதும் இயற்கை நீதியாகும்.

ஆலயம் செல்லும் ஆண்-பெண்கள் ஆடைகள் அணிவதில் இன்று பல மாறுதல்கள் உள்ளன இதில் மேல்நாட்டுப் பாணிகள் அதிகமாக பின்பற்றப்படுகின்றன. இதில் நம் நாட்டு கலசார முறையினைப் பின்பற்றி புதிய வகை ஆடைகளை உருவாக்க வேண்டும்

## திருநீறு தயாரிக்கும் முறை

திருநீறு தயாரிக்க முதலில் நல்ல நாட்டு பசுமாட்டின் சாணங்களைச் சேகரித்து அதை வரட்டியாகத் தட்டி காயவைக்க வேண்டும்

அதன்பின் ஒரு சுத்தமான இடத்தில் காய்ந்த வரட்டிகளை அடுக்கி நெருப்பிட வேண்டும் நெருப்பில் நன்கு எரிந்தபின் துய்மையான வெள்ளை நிறத்தில் உள்ள சாம்பல் கிடைக்கும். ஆதைச் சேகரித்து சல்லடையில்இட்டு சலித்து எடுக்க வேண்டும் அவ்வாறு சேகரம் செய்த இந்தத் திருநிறு அநேக மருத்துவக் குணங்கள் நிறைந்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்கண்ட முறையில் தயாரிக்கப்பட்ட மருத்துவக் குணம் நிறைந்த திருநீறுடன் இயற்கையான வாசனைப்பொருள்களை சேர்த்து உடலில் அணிந்து வந்தால் உடல் நோய்கள் போவது மட்டும் இல்லாமல் கண் திருஷ்டி.-ஏவல்.-பில்லி சூனியம்.-மந்திர தந்திர- எந்திரம் போன்ற தீய சக்திகளிடமிருந்தும் நம்மை காக்கும் என்பது உறுதி

## திருநீர் அணிவதால் ஏற்படும் நன்மைகள்

திருநீறு அணிவதால் பல நன்மைகள் ஏற்படுகின்றன. முறையாக த்தயாரிக்கப்பட்ட திருநீறை நெற்றியில் அணிந்தால் நெற்றிப் பகுதியில் உள்ள தசைகள் மற்றும் நரம்புகளில் தேங்கி இருக்கும் கழிவுப்பொருள்களை ஈர்த்துக் கொள்ளும். இதனால் தலைபாரம் தலைவலி மூளை நரம்புகளில் அடைப்புகள் ஏற்படுவதையும் தடுக்கும் கண் காது உள்ளிட்ட பல பகுதிகள் நன்கு செயல்பட உதவும்.

மேலும் உடலில் பல பகுதிகலில் திருநீறு அணிவதால் அந்த பகுதியிலும் மேற்கண்ட பயன்கள் கிடைக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

திருநாமம் இடுவதாலும் அதே போன்ற பயன்கள் ஏற்படுகின்றன உடலில் திருநீறு அணிவது திருநாமம் இடுவது ஆகிய பல வழிபாட்டு முறைகளிலும் ஓரே மாதிரியாக திருநீறு உடலில் இடப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இன்னும் பல வகையான நன்மைகள் மனிதனுக்கு திருநீறுஅணிவதால் ஏற்படுகின்றது

## மூலிகை நந்தவனம் உள்ள கோவில்களால் ஏற்படும் நன்மைகள்

நந்தவனத்தில் உள்ள செடிகளும் மலர்களும் நோய் தீர்க்கும் மருத்துவக் குணம் நிறைந்தவை ஆலயங்களில் தரும் சுத்தமான தீர்தங்களுடன் சுத்தமான உலோகப் பாத்திரத்தில் கலப்பதன் மூலம் தீர்த்தங்கள் நோய்தீர்க்கும் தன்மையை அடைகின்றது. அவ்வாறான தீர்த்தங்களை மக்களுக்கு வழங்கும்போது அந்தத் தீர்த்தத்தை அருந்தும் மக்களுக்கு நோய்நிவர்த்தி ஏற்படுகின்றது. மேலும் வெட்டிவேர் உள்ளிட்ட இயற்கைப் பொருள்கள் இதனுடன் சேர்க்கப்படுகின்றன. இளநீர்-தேங்காய்த் தண்ணீர் –பஞ்சாமிர்தம்-பொங்கல்-பழங்கள்-உள்ளிட்டவை பல அற்புதமான நன்மைகளை செய்கின்றன.

## மலர்களைக் காதின் மீது அணிவதால் ஏற்படும் நன்மைகள்

மூலிகைத் தன்மைகள் நிறைந்த மலர்களை காதின் மீது அணிவதால் காது பகுதியில் நோய்கள் ஏற்படாமல் தடுக்கின்றது அந்தப் பகுதியில் ஏற்படும் நோய்களைப் போக்கி நிவர்த்தி செய்கின்றது

## பசுமடம் உள்ள கோவில்களால் ஏற்படும் நன்மைகள்

### பசுக்கள் உள்ள கோவில்களில்

- -சுத்தமான பால் கிடைக்கும் இந்தப்பால் குழந்தைகளுக்கும் முதியவர்களுக்கும் நோயாளிகளுக்கும் மிகவும் பயனள்ளதாகும்
- சுத்தமான தயிர் கிடைக்கும் தயிர் மருத்துவ குணம் நிறைந்தது
- சுத்தமான நெய்யால். தீப ஏற்றினால் அந்த ஒளி மூலம் நன்மையும் காற்றில் கலப்பதன் மூலம் மனிதர்களுக்கு ஆரோக்கியத்தினைத் தருகின்றது உணவுவகைகளில் பயன்படுத்தப்பட்டு மருத்துவ முறைகளிலும் பயன்பாட்டில் உள்ளது
- சுத்தமானகோமியம் கிடைக்கும். இது ஆலயத் தீர்த்தங்களில் பயன்படுத்துவதன் மூலம் நோய்தீர்க்கும் மருந்தாகப் பயன்படுகின்றது
- சுத்தமான சாணம் கிடைக்கும் இதன்மூலம் திருநீறு தயாரித்து ஆலயங்களில் வழங்கப்பட்டு மக்கள் அணிவதால் உடல் நோய்கள் நிவர்த்தி செய்யப்படுகின்றது இல்லங்களை சாணம் மூலம் மெழுவதின் மூலம் கிருமி நாசினியாகவும் செயல்படுகின்றது. பயிர் விளைச்சலுக்கும் நல்ல உரமாக அமைகின்றது

### சந்தனம் அணிவதால் ஏற்படும் நன்மைகள்

- சந்தனம் நம் நாட்டில் பல ஆயிரம் ஆண்டுகளாக மனித ஆரோக்கியத்திற்கு பயன்பட்டு வருகின்றது.
- சந்தனம் குளிர்ச்சியைத் தரும் குணம் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது. அதனால் நம் முன்னோர்கள் உடலில் ஏற்படும் உஷ்னத்தினை குறைக்க சந்தனத்தினைப் பயன்படுத்தினார்கள் எனபது கவனிக்கத்தக்கது.
- மனிதன் அதிகம். சிந்திக்கும்போது. உடலில் நோய்கள் ஏற்படும்போதும் உடலில் உஷ்ணம் அதிகம் ஏற்படும் இதைக் குறைக்க நெற்றியில் சந்தனம் அணிந்தார்கள். வருமுன் காப்பதற்காக கோவில்களில் சந்தனம் வழங்கி மக்களை அணியச் செய்தார்கள்
- மேலும் பல மருத்துவப் பொருள்கள் வாசனைத் திரவியங்கள் தயாரிக்கவும் சந்தனம் பயன்படுகின்றது

## ➢ உடல் ஒரு கோவில்

இறைவனின் அற்புதப் படைப்புதான் மனித உடல் மற்றும் உயிர். ஒரு மனிதன் தன் உடலையும் மனதையும் இளம் வயதிலிருந்து நல்ல குருவின் வழிகாட்டுதல் மூலம் கல்வி மற்றும் பயிற்சிகள் மூலமாக தன் உடலையும் மனதையும் தன் அறிவின் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள இயலும் அவ்வாறு வைத்துள்ளவர்களுக்கு இயற்கைச் சக்திகள் எல்லா வளங்களையும் வழங்கும். இந்த நிலையினை அடைய எல்ல மதத்திலும் வழிகள் உள்ளன. அந்த வழிகள் உங்களுக்குத் தொடக்கநிலையினைக் கொடுக்கும். தொடக்க நிலையினை நீங்கள் அறிந்தால் போதும் மற்ற நிலையினை தானாக உங்களுக்குள் இயற்கை சக்திகள் தோற்றுவிக்கும். இப்போது உள்ள சில மதத்தலைவர்கள் சுய லாபத்துக்காக பல தவறான செயல்களை செய்ய வாழிகாட்டியாக உள்ளார்கள் மக்களை தீயவழியில் செயல்பட தூண்டுகின்றார்கள்

## தர்மம் செய்வது
## வெள்ளிக்கிழமை சிதறு தேங்காய் உடைப்பது

- வெள்ளிக்கிழமை இரவு இறைவனுக்கு வழிபாடு செய்து தேங்காய் உடைப்பது காலகாலமாக நடந்துவரும் ஒரு வழிபாடு. இந்த வழிபாடு மூலம் உடைக்கப்படும் தேங்காய்கள் ஆதரவற்றவர்களுக்கு உணவாகப் பயண்பட வேண்டும் என்பதற்காக ஏற்படுத்தப்பட்டது. ஆனால் இன்று தேங்காய்களை பாதைகளில் உடைத்துப் பாதையில் பயணம் செய்பவர்களுக்கு விபத்தினை ஏற்படுத்துகின்றனர்

- எத்தனையோ பேர் உணவு இல்லாமல் தவிக்கும் நிலையில் உணவுப்பொருளை பாதையில் உடைத்து வீண் செய்வது மிகப்பெரும் பாவச்செயலாகும். வெள்ளிக்கிழமை தேங்காய் உடைப்பதன் நோக்கம் ஆதரவற்றவர்கள் அனாதைகள் வயதனவர்கள் நல்ல உணவு கிடைக்காத குழந்தைகள் உள்ளிட்டவர்களுக்கு உணவாகப் பயன்படும் என்பதற்க்காக ஏற்படுத்தப்பட்டவை என்பது குறிப்பிடதக்கது.

- இதனைத் தவிர்க்க வெள்ளிக்கிழமை தேங்காய் உடைப்பவர்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரு பாத்திரத்தில் உள்ளே தேங்காய்களை உடைத்து அதில் சேரும் தேங்காய்களை ஆதரவற்றவர்கள் அனாதை இல்லகங்ளுக்கு வழங்கலாம். இந்தப் பணியியை வியாபாரிகள் சங்கம் இளைஞர்கள்.மன்றங்கள் பொதுச் சேவை அமைப்புகள். ஆன்மீக அமைப்புகள் மறறும்முள்ள பொதுநல அமைப்பைச் சார்ந்தவர்கள் இணைந்து செயல்படுத்தலாம். இதன்மூலம் நடுரோட்டில் தேங்காய் உடைத்து மற்றவர்களுக்கு இடையுறு ஏற்படுவதும் உணவுப்பொருளை வீணாக்கிய பாவமும் தவிர்க்கப்படும். நம் முன்னோர்கள் ஏற்படுத்திய நல்ல நோக்கமும் நிறைவேறும் (தமிழ் நாடு அரசு இதற்க்குறிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுகின்றேன.)

- தர்மம் செய்பவர்கள் தங்கள் பெயர்களை விளம்பரம் செய்வதும் நன்கொடை தருபவர்கள் தங்களின் பெயரை கல்வெட்டில் பதித்து வைப்பதும் அவர்களின் பொருள் வசதியையும் தற்பெருமையையும் குறிக்கும் செயலாகும். இந்தசெயல்

தர்மக் கணக்கில் சேராது. தர்மம் ஆகாது இது எல்லாத்தருமங்களுக்கும் பொருந்தும்

- திருமண விழாவின்போது வழங்கப்படும் உணவுகள் ஏழை எளியவர்களுக்கும் ஆதரவற்றவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் இவ்வாறல்லாமல் இலை நிறைய உணவு வகைகளைப் பரிமாறி ஒன்று இரண்டு பதார்த்தங்களை சாப்பிட்டுவிட்டு மீதியுள்ள உணவுகளை இலையோடு எடுத்து குப்பைத்தொட்டியில் போடுவது மிக மிகப் பாவமான செயல்.

**சுவாமிகள் வாகனங்களிலும் தேரிலும் திரு வீதி ஊர்வலத்தினால் ஏற்படும் நன்மைகள்**

- சிறப்பு வழிபாட்டு விழாக்கள் ஆண்டு உற்சவ காலங்கள் பௌர்ணமி அம்மாவாசை உள்ளிட்ட காலங்களில் சுவாமிகள் திருவீதி ஊர்வலங்கள் வரும்போது அந்த ஊரில் உள்ள வீடுகள் வீதிகள் உள்ளிட்ட இடங்களில் உள்ள குப்பைகளை அகற்றி புதுவர்ணம் பூசி தூய்மைப் படுத்தப்படுகின்றது. இதனால் சுகாதாரம் மேம்பட்டு மக்கள் நோய்கள் தாக்கம் இன்றி வாழ இந்த விழாக்கள் ஏற்படுத்தபட்டது. மேலும் விழாக்காலத்தில் அந்த ஊர்மக்கள் ஒற்றுமையாக இருக்கவும் உதவுகின்றது சில இடங்களில் வேற்றுமைகள் இருந்தாலும் விழக்காலத்தில் வெளிப்பட்டுவிடும் அவ்வாறு உள்ள ஊர்களை கன்டறிந்து ஆட்சியாளர்கள் உரிய நடவடிக்கை எடுத்து எதிர்கால பாதிப்புகளை சரிப்படுத்தலாம்

## கோவிலில் உள்ள தழவிருச்சம் மூலம் ஏற்படும் நன்மைகள்

கோவில்களில் பல வகையான மருத்துவக் குணம் நிறைந்த செடி கொடி மரங்களை நம் முன்னோர்கள் வளர்த்தார்கள்.பூசைக்கு ஆதணைபயன்படுத்தி மனிதர்கள் உள்ளிட்ட அனைத்து உயிர்களும் சுகமாக வாழ்ந்தன

- முன்காலத்தில் வளர்க்கப்பட்ட கோவில் மரங்கள் பவவகை நன்மைகளைக் கொடுத்தது

- கோவிலில் உள்ள யானைகளுக்கு நல்ல தீவனமாகவும் இருந்தது பசித்தமனிதர்களுக்கு கனிகளைக்கொடுத்தது

- ஆனால் தற்போது அப்படிப்பட்ட இலவச உணவுகிடைக்காமல் விலங்கினமும் பாதிக்கின்றது உணவுக்காக மனிதர்களும் பல தவறுகளை செய்கின்றார்கள்

- விஷத்தன்மைகள் நிறைந்த முள் செடி கொடி மரங்களை தனிநபர்களும் - வளர்ப்பதால் இந்தவகை விஷத்தன்மைகள் காற்றில் கலந்து காற்று மாசுபடுகின்றது **(நம்நாட்டில் முன்பு வளர்க்கப்பட்ட செடி கொடி மரங்கள் அனைத்தும் காற்றில் உள்ள மாசுகளைக் குறைக்கும் தன்மைகள் பெற்றிருந்தது)** மாசுபட்ட காற்றை சுவாசிக்கும் உயிர்கள் பல்வேறு நோய்கள் ஏற்பட்டு மரணம் அடைகின்றன.

# வனங்கள் மூலம் ஏற்ப்படும் நன்மைகள்

வனங்களில் பல வகையான மருத்துவ குணம் நிறைந்த செடி-கொடி-மரங்களை நம் முன்னோர்கள் வளர்த்தார்கள் அதனால் மனிதர்கள் உள்ளிட்ட அனைத்து உயிர்களும் சுகமாக வழ்ந்தார்கள்

- முன்காலத்தில் வளர்க்கப்பட்ட மரங்கள் பவவகை நன்மைகளை கொடுத்தது

- யானைகளுக்கு நல்ல தீவனமாகவும் இருந்தது

- வெளி நாட்டினர்கள் தரும் அற்ப உதவிகளை கொண்டு நம் நாட்டில் உள்ள வனங்களில் தற்போது விஷத்தன்மைகள் நிறைந்ந முள் செடிகளை வளர்ப்பதால் பல வகையான தீமைகளை ஏற்டுத்தி உள்ளது தற்போது விஷத்தன்மைகள் நிறைந்ந முள் செடி- -கொடி-மரங்களை வனத்தில் வளர்ப்பதால் அவைகள் வனத்தை குளிவிப்பதற்க்கு மாராக உஷ்ணத்தினை அதிகப்படுத்தி மழை பெய்வதை குறைக்கின்றது **இந்த வகைமரங்களை வளர்ப்பதர்க்கு வெளிநாடுகள் கொடுக்கும் சலுகைகள் பெரும் பாதிப்பினை நம் நாட்டில் ஏற்படுத்தும் மறைமுக போர் என்பதுதான் உண்மை** இதனால் மழைவளமும் இலவச உணவும்(கனிகள்) குறைந்து பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது

- தற்போது விஷத்தன்மைகள் நிறைந்த முள்செடிகளை வனத்தில் வளர்ப்பதால் அந்தச் செடிகளை யானைகள் உள்ளிட்ட விளங்குகள் சாப்பிட முடியாமல் உணவு தேடி ஊருக்குள் வருகின்றது. இதனால் விவசாய பயிர்கள் அழிந்து விவசாயிகள் பெரும்பாதிப்புக்கு உள்ளாகின்றார்கள்

- வனங்களில் உள்ள செடி-கொடி-மரங்களில் பருவகாலங்களில் கிடைக்கும் கனிகள் மனிதர்கள்-விளங்குகள்-மற்றும் ஊர்வன-பறவைகள் உள்ளிட்ட அனைவருக்கும் செலவில்லாத சிறந்த உணவாக பயன்பட்டது

- ஆனால் தற்போது அப்படிப்பட்ட இலவச உணவு கிடைக்கமல் விலங்கினமும் பாதிக்கின்றது உணவுக்காக மனிதர்கள் பல தவறுகளை செய்கின்றர்கள்

- முன்காலத்தில் நிலங்கள் வனங்கள் வளங்கள் நிறைந்ததாகவும் மழைவளம் கிடைக்கவும் பயன்பட்டது. மனிதர்கள் வனத்தில் உள்ள வளங்களை முறையாக பயண்படுத்தாமல் பேராசை கொன்டு வனவளங்களை முறைகேடாக நன்மை தறும் செடி-கொடி-மரங்களை அழித்தார்கள் அவ்வாறு அழிந்த வனங்களில் தீமைதரும் விஷத்தன்மையான மரங்களை வழர்த்து மனிதர்கள் மற்ற உயிர்களுக்கும் தனக்குதானே அழிவைத் தேடிக் கொண்டுள்ளார்கள்.

- இவைகளை மாற்ற வேண்டும் நம் நாட்டில் நம் முன்னோர்கள் வழர்த்த மருத்துவ குணம் நிறைந்த கனிவகைகளைத்தரும் செடி-கொடி- மரங்களையும் வளர்க்க வேண்டும் இவைகள் உயிர் பெற்று வழர்ச்சி தொடங்கியதும் விஷத்தன்மையான மரங்களை அழிக்கவேண்டும்

## குடுமிபோடுதல் தலையை மொட்டை அடித்தல் காரணங்கள்

கோவிலில் அர்ச்சகர்கள் தலையை மொட்டை அடித்துக் கொள்வதும் உச்சிக் குடுமி வைத்துக்கொள்வதும் நடைமுறையில் உள்ளது. இதற்குக் காரணம் கோவில் வழிபாடுசெய்யும் போதும் அன்னதானம் கொடுக்க உணவுகளை தயாரிக்கும் போதும் தயாரித்த உணவுகளை மக்களுக்கு வழங்கும்போதும் தலைமுடிகள் உதிர்ந்து உணவில் கலக்காமல் இருக்கவே தலைமுடியை ஒன்றாக சேர்த்து உச்சிகுடுமி வைப்பதும் பெண்கள் சடையைப் பின்னிக்கொள்வதும் பின்பற்றப்படுகின்றது. மேலும் தலைப்பாகை அணிவதில் பல காரணங்கள் உண்டு. நமது நாடு வெற்ப்பபகுதியாகும் அதிக வெப்பதைத் தடுக்கும் வகையில் தலைப்பாகைகள் அணியப்பட்டன

இவ்வாறான வழக்கங்களைப் பின்பற்றுவதால் உங்கள் உடல் நலம் நன்கு இருக்கும் இப்படிபட்ட பழக்கங்களை உங்கள் குழந்தைகளுக்கு. உரியவைகளை குழந்தைகளுக்கும் நண்பர்களுக்கும் அவரகள் குழந்தைகளுக்கும் கற்றுத் தருவது அவசியம் மேலே கண்டவாறு செயல்பட்டு உங்கள் வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்ளுங்கள்.

## திருவிழா காலத்தில் முடிவெட்டும் நபர் மூலம் ஏற்படும் நன்மைகள்

பழங்காலத்திலிருந்தே திருவிழாக் காலத்தில் மொட்டைஅடிக்கும்போது கை கால் உடலில் உள்ள எல்லா பாகத்திலும் ஏற்பட்டுள்ள நரம்புப் பிடிப்புகள் சதைப்பிடிப்புகள் போன்றவற்றை நெட்டை எடுத்தல் மூலம் முடிவெட்டுபவர்கள் சரி செய்து விடுவர் அப்படிப்பட்ட நுணுக்கங்களை முடிவெட்டுபவர்கள் கற்றிந்திருந்தார்கள் தற்போது இந்தத் திறமை பெற்றவர்கள் மிக மிகக் குறைவு இந்தத துறையில் உள்ள பலர் இதைப்பற்றித் தெரியாதவர்களாக உள்ளார்கள் இதற்க்கு தீர்வு இந்தத் துறையில் பயிற்சியுள்ளவர்களை வைத்து மற்றவர்களுக்கு உரியமுறையில் பயிற்சிகளைக் கொடுக்கவேண்டும் பயிற்சி பெற்றவர்கள் மூலம் மனிதர்கள் உடலில் உள்ள பாதிப்புகள் உடனுக்குடன் நிவர்த்தி செயப்படும் இதன் மூலமாகவும் மனிதர்கள் நன்மை அடைந்தார்கள் முடிதிருத்துபவர் நோய் வரும்முன் காப்பவர் எனலாம் திருவிழாக் காலத்தில் மருத்துவ முகாம் போல் நடத்தலாம்